நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.29/2024

<u>அ.சா: 1 (LW 1)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விசாலாட்சி | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

03.08.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(எதிரி ஆஜர் )

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் <u>11.19</u>

நான் ஆண்டிபட்டி தாலுகா நல்லமுடிபட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். காளியப்பன் எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரி ஈஸ்வரனை எனக்கு தெரியும். எனது கணவர் காளியப்பனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையே ஈஸ்வரனின் மனைவியை எனது கணவர் சேர்த்து வைத்திருப்பதாக சந்தேகப்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது. 13.05.2023 ம் தேதி எங்கள் ஊரில் திருவிழா நடந்துகொண்டிருந்தது. அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் நான் எனது கணவர் மற்றும் ஊர்க்காரர்கள் அனைவரும் கன்னிமார் கோவிலில் இருந்து பத்ரகாளியம்மன் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தபோது எதிரி ஈஸ்வரன் அங்கு வந்து எனது

கணவரை பார்த்து எனது மனைவியை நீ சேர்த்து வைத்திருக்காய் என்றும் தேவிடியா மகனே செத்து ஒழிடா என்று கூறி எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் எனது கணவரின் இடது பக்க மேல் இடுப்பில் கத்தியால் குத்தினார். அதனால் என் கணவருக்கு ரத்தம் வந்தது. நானும் செல்வமுருகன், குமார், மாரியப்பன் மகன் பெத்துராஜ் ஆகியோர் எதிரி ஈஸ்வரனை சத்தம் போட்டு பிடிக்க முயன்றபோது அவர் கத்தியுடன் தப்பிச்சென்றுவிட்டார். அங்கிருந்த செல்வமுருகனும், குமாரும் எனது கணவரை பைக்கில் வைத்து பக்கத்தில் இருக்கும் அய்யனார் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர். அவர்கள் அங்கிருந்து ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல கூறினார்கள். நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு அவருக்கு முதல் உதவி அளிக்கப்பட்டது. மேல்சிகிச்சைக்காக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு 38 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். நான் மருத்துவமனையில் இருந்தபோது ராஜதானி போலிசார் வந்தனர். அப்போது எனது கணவருக்கு அறுவை சிகிச்சை செய்ய ஆபரேசன் தியேட்டரில் இருந்தார். அதனால் போலிசார் என்னிடம் விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர். போலிசார் புகார் வாக்குமூலத்தை படித்துக்காட்டி என்னிடம் கைபொப்பம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தியால் தான் எதிரி ஈஸ்வரன் எனது கணவரை தாக்கினார். அந்த கத்தி **சா.பொ.1** ஆகும். சாட்சியிடம் காட்டப்பட்டது இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு RPR.No.37/2025 என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கத்தி ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு முன்வரவில்லை.</u>

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.03 18:29:57 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:03.08.2026